செய்தி வெளியீடு எண்.742 நாள்.21.10.2009

## பத்திரிக்கைச் செய்தி

### மாநில பழங்குடியினர் நல வாரியத்தின் மூன்றாம் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் பேரில் அமைக்கப்பட்ட மாநில பழங்குடியினர் நல வாரியத்தின் மூன்றாம் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள் தலைமையின் கீழ் சென்னை தலைமைச் செயலக கூட்டரங்கில் இன்று (21.10.2009) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பழங்குடியினருக்கு தமிழக அரசால் தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்து அமைச்சரவர்கள் வாரிய உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கென 799.30 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பழங்குடியினர் பள்ளிகள் நிலை உயர்த்தப்பட்டு மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்பட்டு வருகிறது. பழங்குடியினருக்கு கறவை மாடுகள், ஆடு அலகுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டிகொடுக்கப்பட்டு, குடிநீர் வசதி தரப்படுகிறது. பழங்குடியினர் வாழும் பகுதியில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு பழங்குடியினருக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விழிப்புணர்வை அம்மக்களிடையே ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை வாரிய உறுப்பினர்கள் எடுக்க வேண்டும் என அமைச்சரவர்கள், அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

பழங்குடியினர் நல வாரியத்தில் இதுவரை 10132 நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவியாக ரூ.2,30,700/– வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் உறுப்பினர்களை துரிதமாக பெருமளவில் அனுமதித்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி அவர்களுக்கு நல வாரியத்தின் மூலம் வழங்கப்படவுள்ள சலுகைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி முதல்வர் கலைஞர் அவர்களால் பழங்குடியினர் நல வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 1 கோடி ரூபாயினை பழங்குடியினர் மக்களின் நலனுக்கென உடனடியாக பயன்படுத்திட தக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கும் அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்து பழங்குடியின மக்களிடையே இத்திட்டத்தினை கொண்டு சேர்க்க பழங்குடியின வாரிய உறுப்பினர்களுக்கு அமைச்சரர்வர்கள் அறிவுறுத்தினார்கள். உதாரணமாக பழங்குடியினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவிதொகையாக ரூ.2000/—மும், மகப்பேரு உதவித்தொகை ரூ.6000/— விபத்தினால் மரணமடைந்தால் 1 லட்சம் ரூபாயும், விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் 10 ஆயிரம் ரூபாய் முதல் 1 லட்ச ரூபாய் வரையும், இயற்கை மரணம் ஏற்பட்டால் ரூபாய் 15 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. மேலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை 10 ஆம் வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு முடிய, தொழிற்கல்வி உட்பட அனைத்து படிப்புகளுக்கும் வழங்கப்படுகிறது. முதியோர் ஓய்வூதியமும் பழங்குடியினர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இப்பலன்கள் பழங்குடியின மக்களிடம் உரிய முறையில் சென்று சேர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாரிய உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அமைச்சரவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் வாரிய உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சரவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற ஆதிதிராவிடர் நலத்துறை மூலமும் மற்ற

துறைகள் தொடர்பான விவரங்களை அந்தந்த துறைகளில் சேகரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் பழங்குடியினர் நல வாரிய முதல் கூட்டத்தில் வாரிய உறுப்பினர்களால் எடுத்துவைக்கப்பட்ட கருத்துகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ராணி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.விஸ்வநாத் அ. ஷகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ. சிவசங்கரன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு உ.இரவீந்திரன்,இ.வ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் சார்பாக திரு K.ஹரிகிருஷ்ணபிள்ளை மற்றும் நிதித்துறையின் துணைச் செயலாளர் திரு.T.முத்துலிங்கம், மற்றும் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9